703



# தென்சேரி கிரி சுப்ரமண்யர் பேரில் சுகிர்த பஞ்சாமிர்த ஸ்ரீ திருப்பதிகங்கள்

இஃது
கன்னிச்
சமீன் சரபம்
உடுமலை
முத்துசாமி
கவிராயர் சீடன்
பூளைநகர்
**நாராயணனால்**
இயற்றப்பெற்று

— 1924 —

பொள்ளாச்சி,
... அச்சுயந்திரசாலையில் பதிபிக்கப்பெற்றது.

28 JAN 1924

O26:417
N24
L818777



உ

# உடுமலைச் சரபமாணவ - நாராயணன்

இயற்றிய

# சுகிர்த பஜனாமிர்த
# கீர்த்தனைப் பதங்கள்.

## கணேசர் துதி.

நேரிசைவெண்பா.

சீர்விளங்குந் தென்சேரி சேய்வடிவே லன்மீதிற்
பார்வழங்கப் பாமாலை பாடுதற்கு சோர்வெனுஞ் சொல்
வந்துளத்திற் றேயா வரமருள வேயந்தத்
துந்துளத்தி லூர்வோன் துணை.

(மதீனமே மோரேசையா பாலாயமே) என்ற மெட்டு.

## பல்லவி,

சூர்குலம் வேரறுத்த சுப்ரமண்யனே
தூய சுப்ரமண்யனே — சூர்

## அநுபல்லவி.

திருப்புகழ்ப் பிரியா தென்சேரிகிரியா
தெய்வ குஞ்சரிமைய லாகிரியா — சூர்

## தொஹறயரு.

தேஜோன்ம யானந்த சிற்சுக விலாசனே
சின்மயப்ரணவ ரூபா
மாசோபிதந்தரும் மலைமகளின் மடிமீது
மகிழ்விளையாடு பூபா

## ஷை துடர்,

மாமுத்துசாமி மனமொத்தநேமி
மைந்தன்நாராயணன் சொல்கந்தசாமி துஷ்ட — சூர்

மைகூந்த பேக்குருபான் [என்ற மெட்டு]

---

## பல்லவி.

2. மயூர் மூர்வாகனு குற வனிதைமோகனு [மயூர]

## அநுபல்லவி.

மறையி லின்ப முதல்வனான்
மாலோன்மரு மகனுமான [மயூர]

சரணம்.

மாயாவி லாசத்திலே
நாயேன் பலாசத்திலே
மனத்தைவிட்டுழல் வருத்தமறறிட
கருத்தினைக்கொடு வரத்திலற்புத [மயூர]

ஷை

தேரார் தென்சேரிகிரி
தேவா தெய்வகுஞ்சரி
திகழும் நற்றவக் குறவர் பொற்கொடி
மகிழும் சித்திர நடன முற்றிடு [மயூர]

ஷை

சரப கவிதை முத்து
சாமி சீடன் துதித்து
தழையு முத்தமிழ் துதியனைத்தையு
மூமது பொற்பத மதனிலொப்பிடும் [மயூர]

---

தாரானு போனுதாரா [என்ற வர்ண மெட்டு]

பல்லவி.

தேரோட்டம் தைப்பூஸத் தே—ரோ—ட்டம்
சிங்காரஞ்சேரி தென்சேரிகிரித் [தே]

அநுபல்லவி.

சூரர்குலம் வேரறுத்தோன்
சுடர் வடி வேல்பிடித்தோன்

தோகைகுஞ்சரி வள்ளி மனோகரன்
மோகமொன்றிய பக்த்தஜனாகரன் [தே]

சரணத் தொஹையரு.

பேரின்பவாரிதிப் பிரணவப் பொருளாமீல
பிரமனைச் சிறையில் வைத்தோன்
ஏருகத்தோன்மைந்த னேழைக்குதாரத்த
னீய்கைக்குகந்த சித்தோன் [தே]

துடர்.

இயலிசை நாடகத்தி
லேற்றதமிழின் விர்த்தி
இயம்புஞ்சரப இஷ்டர்கள் கூடும்
நயம்பரவிட நன்மை கொண்டாடும் [தே]

---

வனஜாட்சி (என்ற வர்ணமெட்டு)

பல்லவி.

கதிர்வேலா கனமுனிவரர் தொழும் கதிர்

ஷை துடர்கள்.

கடியசூரர் - படியுளோரை - யிடர்செயாது மடியமோதும் [கதிர்]

ககனமுகடதிர - கனகமயில் நடன [கதிர்]

கதிர்பாவிய - தினைவனநடு - வதிவுலவிய - வனிதைமகிழும் [கதிர்]

காலனையெற்றியபாத ஞானவனைப்பிடநீத
போதனைசெப்பியநாத ஹியபத்தர்சமேத [கதிர்]

### அநுபல்லவி.

மதியின் முகவதன மலைமகள் பாலா
மௌவுன தேசிகுரு மறையின் விசாலா
ததியிது வரமருள் சரவணை சீலா
தசவதாரன் சசிமனுளன்
தசிவுதார நிஜகுணுள [கதிர்]

### சரணம்.

சாதகன் னிச்ஜமீன் சாபசௌ பாக்யம்
தமிழ்முத்து சாமிசேடர் தனிலேகி லாக்யம்
பரவும்நாரா யணன் பகர்துதி வாக்யம்
பரிபங்கேரு காணுங்கோரி
வருதென்சேரி கிரிசம்சாரி [கதிர்]

---

மகமாயி கௌரி நீ மாகாளி—என்ற மெட்டு

### பல்லவி.

சேவற் கொடிபிடித்த ஜெயசீலா தென்
சேரிகிரியமர்ந்த திருவேலா சேவ.

### அநுபல்லவி.

18187

தேவர்க்குதாரனே செந்தமிழ்ச்சாரனே
தினைப்புனத்தில் வேடனாய் நின்றவா கொடுர்
தீயவரக்கர்களை வென்றவா சேவ

### சரணம்.

உன்னையல்லாமலே உலகத்தின்மீதிலே
உற்றதுணையென்பது மினியேது வேறு
உண்டென்றுலுமதனை நீயோது சேவ.

ஷை

சாரத்தமிழ்முத்து சாமியடியைநத்தும்
தனையன் நாராயணன் சொல் படித்தேனே உன்றன்
தண்மலர்ப்பாதமதை யடுத்தேனே சேவ.

---

# தேசீய கீதம்.

## ஆண்டி பண்டாரம்—என்ற மெட்டு.

பல்லவி

இந்துதேசரே - கேளும் - இன்பநேசரே இந்து

(துடர் கண்ணிகள்)

மந்த்ரோபதேசமான வாய்மையுள்ள காந்திமகான்
அந்தோசிறையில்வைத்த ஆங்கிலேயர் சூட்சிதன்னை [இ]

பந்துஜனர்செழித்த பாரதமாது மக்கள்வாயில்
பந்துவைத்தேநமதுப்பணம் பரிக்கும்நீசர் நீதிமார்க்கம் [இ]

சொந்தப்பெண்டாட்டிதனைச் சோரன்புணர்ந்ததுபோல்
எந்தப்பயலோவந்து இந்தப்பூமியாளுகிறான் [இ]

வரிகள் வரிகளென்று வருடம் பலதடவைகளில்
உரியபொருள்பரிகொடுத்தல் [illegible]வுங்கள்மதியீனமன்றோ [இ]

தண்ணீர்முதலியன தாபரவஸ்துக்களெல்லாம்
பண்ணினவர்வேறிருக்க படைத்தவர்போல்வரியமைத்தார் [இ]

கால்நடைக்குப்புண்ணிருந்தால் காருண்யத்தைக்காட்டிவிட்டு
தோல்தவிறதசையையெல்லாம் துப்பரவாயறிந்துவிட்டார் [இ]

இத்தனைக்குங்காரணந்தான் இந்தியர்கள் சிற்சிலர்கள்
உத்தியோகபோகமதால் யுக்திகளைப்பிரித்துவிட்டார் [இ]

நெய்பர்களாகச்செல்லும் நேசதேசத்தலைவர்சிலர்
சும்பர்களானகதை சொல்வதென் அறிந்திருப்பீர் [இ]

என்னசொன்னபோதிலுந்தான் எஸ செஸ் சென்றவார்த்தைதனை
நந்நயமாய்ப் பாடஞ்செய்து நாடினர்கள்மதிப்பதனை [இ]

மற்றும் அனேகதுன்பம் மாநிலத்தில் ஓங்கிபதை
முற்றும் அறிந்த நீங்கள் மூடபக்தியை விடுங்கள் [இ]

மாசேதவிர்தவங்கள் மதுரமுத்துசாமிசீடன்
தேசியக்கீதக்கொள்கை தினமும்நீடப்புகலுவீரே [இத்]

---

## ஸ்ரீமான் உடுமலைச் சரபமுத்துசாமிக் கவிராயரவர்கள் இயற்றிய கீதம்.

இராகம்—செஞ்சுருட்டி] [தாளம்—ஆதி.

கண்ணிகள்.

ஏழைகளில்லாதுபோனால் வாழ்வதெப்படி
ஈசனொருவன்படைத்தான் இதுபடிப்படி ஏழை

கூலிகுறைக்கிறது கூடாதகார்யம்
கொண்டசெல்வ லோபிகளுக்கொருவீர்யம் ஏழை

சாமியிருக்குது தலைக்குமேலே
பூமிபிழைக்கிறது பொருளினாலே ஏழை

எல்லோருங்கூடி நாமிருந்துவிடலாம்
ஏருகூலிசம்பளத்தின் வேலைதொடலாம் ஏழை

சந்ததமும்சரபமுத்து சாமியைப்பாடி
சிந்தையிலேசந்தோஷமுமுந்துவந்தேடு ஏஷ்

---

ஷையார் மாணவன் வ. எம். வரதராஜப் பெருமாள்சாமி
கவிராயரா லியற்றிய கீதம்.

(சுயராட்சிய மதிகதூரமல்ல தெரிவீர்—என்றமெட்டு)

இராகப்—அமீர்க்கல்யாணி] [தாளம்—ஆதி

பல்லவி.

திவ்யதேஜோன்மயஸ்ரீ தென்சேரிகிரியா
சேயன்முறைகேளாத தேசரியா திவ்ய

அநுபல்லவி

அவ்வைசோதரிவள்ளி யாள்மோகவேரியா
அலதுதெய்வானைமைய லாகிரியா திவ்ய

தொஹையரு சரணம்.

அருணகிரியார்திருப் புகழ்மீதுகவனமோ
அலதுஞா பகமுமேதோ
கருணை நீயெங்களைக கவனியாதுற்றிடல்
தர்மமமோ தன்மையீதோ

தொடர் பல்லவிபோல்

தாணியில்நினைத்தெய்வந் தானெனல்பொய்யா
சாஸ்திரங்களுநின்பெயரே சாற்றுதைய்யா திவ்ய

மேற்படி சரணம்

வேதாவிதித்தபடி யேயாகு மென்னிலவனைச்சிறை
விதித்தவனுமே நீயலையோ
ஆதாலு மேயெனது பொல்லாத கோள்களை
யகற்றியருள் தருதல்மலையோ

தொடர் பல்லவி போல்

அரிஹரப்ர மாதியோ ரனுஷ்டிக்குந்தேவா
அடிமைபெருமாள்குறை யகற்றிடவா வா திவ்ய

---

முற்றுப் பெற்றது

# விளம்பரம்.

---

ஸ்ரீ கிருஷ்ண அச்சுயந்திரசாலையில் பைண்டிங் செய்யப்பெற்ற நோட்டு புஸ்தகம், எக்ஸர்சயிஸ் புஸ்தகம் இன்னும் ஸ்கூல் ஸ்டூடன்ஸ்களுக்கு வேண்டிய நோட்டு புஸ்தகங்களும், வியாபாரிகளுக்குவேண்டிய குறிப்பு, பேரேடு, சிட்டா புத்தகங்களும் ஆர்டர் கொடுப்பவர்களிஷ்டம் போல் பைண்டிங், ருலிங் வெகு நேர்த்தியாயும், புத்தகம் வெகு உறுதியாயும் செய்துகொடுக்கிறோம்.

இன்னும் வால்நோட்டீஸ், நோட்டீஸ், புரோநோட் பாரங்கள், சுபகாரியப் பத்திரிகைகள், லெட்டர் பேப்பர், கவர், கார்டுகளும், பலவித அச்சுவேலைகளும் வெகு சுத்தமாயும் சார்ஜ் குறைவாயும் நயமாயும் வேலைசெய்து கொடுக்கக்கூடும்.

**P. K.** கிருஷ்ணசாமி பிள்ளை
புரோப்ரைட்டர்,
ஸ்ரீ கிருஷ்ண பிரிண்டிங் வொர்க்ஸ்
பொள்ளாச்சி.

---

கல்விக்கனதனவான்களுக்கோர் விஞ்ஞாபனம்.

எதிர்பாருங்கள்! வெளியாகிறது!! எதிர்பாருங்கள்!!!

கனவான்களே! அஃதாவது?

ஸ்ரீ மாம்பழனி வாலசமுத்திரம் விஸ்வகுலமணி
வி. எம். வரதராஜப் பெருமாள்சாமிக்
கவிராயரால் இயற்றப் பெற்ற 16-காண்டங்களடங்கிய
நவீன நாடகாலங்கார நவரச சம்பூரண

## இரகுவீர ராமாயணம்.

பொள்ளாச்சி ஸ்ரீ கிருஷ்ண அச்சுயந்திரசாலையில் வேலை நடக்கிறது
கூடிய சீக்கிரம் வெளி வரும்.

181877